**செய்தி வெளியீடு எண்:496** **நாள் :09.10.2014**

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (9.10.2014) தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்

********

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் **திரு.செல்லூர் கே.ராஜூ** அவர்கள் தலைமையில், இன்று (9.10.2014) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட இனங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு, அனைத்து அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கினார்கள்.

1. தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு, துவக்கிவைக்கப்பட்ட 10 **அம்மா** மருந்தகங்களுடன் தற்போது துவக்க தயார் நிலையில் உள்ள 25 **அம்மா மருந்தகங்களை** உடனே திறக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், ஏற்கனவே கூட்டுறவுத்துறையால் நடத்தப்பட்டு வரும் அனைத்து மருந்தகங்களையும் நவீனமயமாக்கி விற்பனையை அதிகரித்து இலாபத்தில் நடத்தவும், இம்மருந்தகங்களை பொதுமக்கள் எளிதில் அணுகும் இடங்களில் அமைக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை.
2. தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை செயல் படுத்துதல் குறித்து.
3. பண்ணை பசுமை காய்கறி விற்பனை திட்ட செயல்பாடுகள் குறித்து.
4. கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொதுவிநியோகத் திட்ட மானியம் மற்றும் முதன்மைச் சங்கங்களுக்கு வழங்கப்படும் விளிம்புத்தொகையினை உயர்த்தி வழங்குதல் தொடர்பாக.
5. வரும் தீபாவளி பண்டிகைக்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் தரமான வெடிபொருட்களை பொதுமக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்வது மற்றும் அதற்கான தற்காலிக உரிமம் பெறுதல் தொடர்பாக.
6. 2014–15 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளை நிறைவேற்றுதலில் முன்னேற்றம் தொடர்பாக.
7. விவசாய பருவகாலம் துவங்கி உள்ள நிலையில் பயிர்க்கடன் மற்றும் உரங்களை விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் விவசாய கருவிகளை வழங்குதல் தொடர்பாக.
8. கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் கடன்கள், மற்றும் வைப்பீடுகள் திரட்டுதல் குறித்து.
9. கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை கண்காணித்தல் – ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்து.
10. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து ஆய்வு.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., அரசு கூடுதல் செயலாளர் திரு.எம்.ஷியாம்சுந்தர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.பி.சிவன்அருள், திரு.இராம. ஜெயம்பாண்டியன், திருமதி கா.பிரமிளா, திரு.க.மா.வெள்ளியங்கிரி, திரு.கே.ஜெகன்நாதன், திரு.என்.வில்வசேகரன், திரு. பா.பாலமுருகன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.ம.அந்தோனிசாமி ஜான் பீட்டர் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*******

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**